பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியின் பேச்சில் குறுக்கிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினுர் :—

"ஒரு குறிப்பிட்ட சம்பவம் இந்த மன்றத்திலே நடந்தது, இந்த மன்றத்திலே நடைபெற்று, ஒவ்வொரு கட்சித் தலைவரும், நாங்கள் பேசிவிட்டு வெளியே சென்றோம். அதற்குப் பிறகு, சில விஷயங்கள் முடிந்தது. அப்படியிருக்கும் பொழுது உண்மைக்கு மாருக நாங்களெல்லாம் வருத்தம் தெரிவித்ததாக உறுப்பினரவர்கள் சொல்கிருர்கள். ஆகவே, இந்தப் பிரச்சனையை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்."

திரு. தங்கமணி அவர்களால் ஆட்சேபிக்கப்பட்ட திரு. வீராசாமி அவர்களின் பேச்சின் பகுதி கீழே தரப்பட்டுள்ளது :—

"அப்படித்தான் செய்தார்கள் . . .

அதைப்பற்றி எதிர்க் கட்சியிலே இருப்பவர்களிடம் தனித்தனியாகக் கேட்டால் சொல்வார்கள். . .

அந்தச் சம்பவத்தைப் பற்றி வருத்தப்பட்டிருக்கிருர்கள். . . .

அவர்களுடைய ஒவ்வொரு தலைவரும் தனிப்பட்ட முறையிலே வருந்தியிருக்கிருர்கள்."

எந்த ஒரு கூற்றும் சட்டமன்றப் பேரவைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை தரவேண்டுமென்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டிருந்தால் அது அவையுரிமை மீறிய செயலாகும். அவையில் நடந்த நிகழ்ச்சியை மாற்றியோ, திரித்தோ கூறினலும் அவையுரிமையை மீறிய செயலாகும்.

திரு. வீராசாமி அவர்கள் பேச்சில் எதிர்க்கட்சி தலைவர்கள் எங்கு, யாரிடம் வருத்தம் தெரிவித்தார்கள் என்று குறிப்பிடப் படவில்லை. ஒவ்வொரு தலைவரும் வருத்தம் தெரிவித்ததாகப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே அல்லாமல், அவையில் வருத்தம் தெரிவித்தார்கள் என்று கூறவில்லை.

எனவே, மேற்படி நிகழ்ச்சி குறித்து அவையுரிமை மீறிய செயல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) 27—3—1975 அன்று திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சிலிருந்து நீக்கப்பட்ட சில பகுதிகள் மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்வது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 27—3—1975 அன்று சட்டக் கல்லூரி மாணவர் விடுதி சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள்—

கே. டி. கே. தங்கமணி,
கோவை செழியன்,
டாக்டர் ஹாண்டே,
ஜே. ஜேம்ஸ்,
என். கே. பழனிசாமி,
எஸ். அழகர்சாமி,
எம். சுரேந்திரன்

ஆகியோர் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தானும் கருத்துத் தெரிவிக்க முயன்ற போது, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான நோட்டீஸ் கொடுத்த உறுப்பினர்கள் தவிர்த்த வேறு உறுப்பினர்கள் கருத்தறிவிக்க விதிகளில் இடமில்லை என மறுத்தும், அதன் பின்னர், திரு. கிருஷ்ணமூர்த்தி "Point of order" என்று கூறி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி எதுவும் கூறாமல், மாணவர் விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறியதும், அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது, ஆகவே, அவர் பேசியதை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தீர்ப்பு வழங்கியது, நம்முடைய விதி

83 (8) "The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members when in his opinion it is an abuse of the right of raising a point of order".

எனத் தெளிவாகக் கூறுவதால், முற்றிலும் முறையான தீர்ப்பே ஆகும்.

எனினும் விதிகள் தெளிவாக இருப்பினும், சிற்சில சமயங்களில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அறிக்கை கொடுக்காத உறுப்பினர்களும் கருத்துக்கள் வழங்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.